அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 446/2014 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி. வா.சா.1 06.11.2024

பெயர் உஷா தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

வாதிதரப்பு குறுக்கு விசாரணை:–

1. நிரந்தர உறுத்துகட்டளை கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் முதுகலை பட்டம் பெற்றுள்ளேன். தாவா சொத்து முகப்பேர் ரோஸ் அப்பாட்மென்டில் உள்ளது, ஜக்கு பந்தி ஞாபம் இல்லை , விஸ்திரனம் 768 சதுரஅடி இருக்கும் தரைதளத்தில் உள்ளது. சர்வே எண் 442 என்று நினைக்கிறேன்.

2. வாதி எனது சொத்தில் குத்தகைக்கு வந்தார். குத்தகைக்கு ரூபாய் 3,50,000 கொடுத்தார். குத்தகை 11 மாததிற்கு போடப்பட்டது. குத்தகை காலம் முடிந்ததற்கு பிறகு தாவா சொத்தை பற்றி வாதிஎன்னுடன் பேச்சி வார்த்தையும் நடத்தவில்லை. நாங்கள் அவருடன் ஒரு கிரைய 23.03.2014 ஒப்பந்தம் போட்டோம், கிரைய தொகை ரூபாய் 34 லட்சம் என்று

ஒப்புக்கொள்ளப்பட்டது. 7 லட்சம் ரூபாயில் குத்தகை தொகை போக மீதம் உள்ளதை தவணைகளில் கொடுத்தார்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)